## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர்பட்டப்படிப்புகள் பீடம்

# புதிய அனுமதி

**பண்பாட்டியலில் முதுமாணி (Master of Cultural Studies – MCST ) 2023/24 (அணி V)**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் கலைமாணிப் பட்டம்

**அல்லது**

- தொழில்முறை அனுபவம் மற்றும் ஈடுபாட்டுடன் வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்.

**அல்லது**

- யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடம் மற்றும் மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு ஏதேனும் சமனான தகுதிகள்.

**தெரிவுமுறைமை:-**

- ➢ நேர்முகத் தேர்வு

**கற்கைக் காலம்**: ஒருவருடம்

**மொழி மூலம்** : தமிழ்

**கற்கைநெறிக் கட்டணம்** : **135,000/-** *(5000/- மீள அளிக்கப்படும்)*

**விண்ணப்பப் படிவக் கட்டணம்** : **1,000/-**

**விண்ணப்ப முடிவுத்திகதி** : **29.03.2024**

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை**

1. மக்கள்வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச்சீட்டில் **(190052550002134)** எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான **ரூபா 1000/-** கட்டணத்தை செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

2. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் **www.grad.jfn.ac.lk** எனும் வலைதள வசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தளம் மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் மக்கள் வங்கியில் **(190052550002134)** எனும் கணக்கிலக்கத்திற்கு **ரூபா 1000/-** செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் **29.03.2024** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர்,உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

***குறிப்பு : பண்பாட்டியலில் முதுமாணி (அணி V) கற்கைநெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.***

**பதிவாளர்**
15.02.2024